19th July 1962]

ஒலிபெருக்கிக்குத் தடை (கோட்டூர்).

* 420 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா (திரு. இராம அரங்கண்ணல் சார்பாக) : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னை-அடையாறு-கோட்டூர்புரத்தில் மட்டும் ஒலிபெருக்கிகள் வைத்துக்கொள்ள அனுமதி மறுக்கப்பட்டு வருவதன் காரணமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Licences are not issued for the use of loud speakers in any place including Kottur which is within a radius of half-a-mile from the Cancer Institute, Adyar.

திரு. ஆ. கு. சுப்பையா : ஸார், அங்கே இருக்கக்கூடிய மாடி வீடுகளிலே மாத்திரம் இந்த ஒலி பெருக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, சிறு குடிசைகளிலும் வைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மாடி வீடாக இருந்தாலும், சிறு வீடாக இருந்தாலும் வீட்டுக்குள்ளே வைத்துக்கொண்டால் பரவாயில்லை. ஆனால் இதை வெளியிலே வைத்து தொல்லை கொடுக்கும்போதுதான் நாம் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்களிடம் ஏதாவது குறிப்பிட்ட தகவல் இருந்தால், என்னிடம் தெரிவிக்க வேண்டுகிறேன்.

Co-operative spinning mills

* 421 Q.—SRI M. S. SELVARAJAN (on behalf of SRI V. KRISHNAMOORTHY) : Will the Hon. the Minister for Industries be pleased to state the total amount of profit of the Co-operative Spinning Mill in Tirunelveli district, for the past three years ?

THE HON. SRI R. VENKATARAMAN : The following is the financial result of the working of the South India Co-operative Spinning Mills, Limited, for the three years ending 1959–60 :—

1957–58—Net loss, Rs. 26,379·48.

1958–59—Net profit, Rs. 1,90,974·09.

1959–60—Net profit, Rs. 4,52,307·44.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஸார், கூட்டுறவு நூற்பு ஆலைகள் பெரும்பாலும் மிகவும் லாபகரமாகவே நடைபெறுவதாகக் கனம் அமைச்சர் அவர்கள் தகவல் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, புதிதாகக் கூட்டுறவு நூற்பு மில்கள் ஆரம்பிப்பதற்கு அடிப்படையான தேவைகள் என்னென்ன வேண்டுமென்பதை அரசாங்கம் அறிவிக்க முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்ராமன் : நாங்கள் ஜில்லாவுக்கு ஒரு கூட்டுறவு நூற்பு ஆலை கொடுப்பது என்று முடிவு செய்து, அந்த வகையிலே கொடுத்துக்கொண்டு வருகிறோம். மூன்றாவது